www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com

**11ஆம் வகுப்பு**

# அரசு பொதுத்தேர்வு - மார்ச் - 2025

## மொழிப்பாடம் - பகுதி I - தமிழ்

கால அளவு : 3.00 மணி நேரம் ] (வினாத்தாள் விடைகளுடன்) [ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I

**குறிப்பு : (i) அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். [14 × 1 = 14]

1. பொருத்துக.
அ) ஆதிநீடல் - பைங்கூழ்
ஆ) அடி அகரம் ஐ ஆதல் - செங்கதிர்
இ) இனமிகல் - காரிருள்
ஈ) முன் நின்ற மெய் திரிதல் - பெருங்கொடை

2. ஒப்புரவு என்பதன் பொருள் ________ .
அ) ஊருக்கு உதவுவது ஆ) அடக்கமுடையது
இ) செல்வமுடையது ஈ) பண்புடையது

3. **கூற்று** : எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து, புறம் சார்ந்த நூல்.
**விளக்கம்** : சேர மன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்.
அ) இரண்டிற்கும் தொடர்பில்லை
ஆ) **கூற்று** சரி; **காரணம்** தவறு
இ) **கூற்று** தவறு; **காரணம்** சரி
ஈ) இரண்டும் சரி

4. 14 வயதுக்கு உட்பட்ட அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி வழங்கப்படல் வேண்டும் என்பதை வலியுறுத்தும் அரசியலமைப்பு சட்டப்பிரிவு :
அ) 47 ஆ) 43
இ) 40 ஈ) 45

5. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.
அ) உதவியாள் ஆ) காவலாளி
இ) ஆசிரியர் ஈ) மேலாளர்

6. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ________ நினை.
அ) மறதியால் கெட்டவர்களை
ஆ) முகக்குறிப்பை அறிந்தவரை
இ) சொல்லேர் உழவரை
ஈ) எண்ணியதை எண்ணியவரை

7. Classical Language -கலைச்சொல் தருக.
அ) சிறந்த மொழி
ஆ) செம்மொழி
இ) தனிமொழி
ஈ) தொன்மொழி

8. பொருத்தமான இலக்கிய வடிவத்தைத் தேர்க.
அ) யானை டாக்டர் - குறும் புதினம்
ஆ) ஏதிலிக் குருவிகள் - மரபுக் கவிதை
இ) ஐங்குறுநூறு - புதுக்கவிதை
ஈ) திருமலை முருகன் பள்ளு - சிறுகதை

9. நிழல்போலத் தொடர்ந்தான் - இது எவ்வகை உவமை?
அ) வடிவம் ஆ) வினை
இ) உரு ஈ) பயன்

10. பற்று நீங்கியவனுக்கு உண்டாவது - பற்றற்றவனைப் பற்றுவதால் உண்டாவது :
அ) பொருள்களின் துன்பம் அகலும் - பற்றுகள் அகலும்
ஆ) பற்றுகள் பெருகும் - பொருள்களின் இன்பம் பெருகும்
இ) பொருள்களின் இன்பம் பெருகும் - பற்றுகள் பெருகும்
ஈ) பற்றுகள் அகலும் - பொருள்களின் துன்பம் அகலும்

11. வெண்சுவை - இலக்கணக் குறிப்பு தருக.
அ) உவமைத்தொகை ஆ) வினைத்தொகை
இ) உம்மைத்தொகை ஈ) பண்புத்தொகை

12. "ஒற்றை வைக்கோல் புரட்சி" என்னும் நூலை எழுதியவர் :
அ) நம்மாழ்வார் ஆ) பாரதிதாசன்
இ) பாரதியார் ஈ) மசானபு ஃபுகோகா

13. கீழ்க்கண்ட புதிருக்கான விடையை தேர்க.
பூவின் உறுப்பும் நானே; புன்னகையின் பிறப்பிடமும் நானே ________
அ) மதி ஆ) கம்பு
இ) ஆழி ஈ) இதழ்

14. தவறான இணையைத் தேர்வு செய்க.
அ) மல்லி + இலை - உயிர் + மெய்
ஆ) கலை + அழகு - உயிர் + உயிர்
இ) பல் + பொடி - மெய் + மெய்
ஈ) மெய் + அறிவு - மெய் + உயிர்

### பகுதி - II - பிரிவு - 1

**குறிப்பு : எவையேனும் மூன்று** வினாக்களுக்கு விடை தருக. [3 × 2 = 6]

15. 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?
16. மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?
17. மனோன்மணீயம் - நூற்குறிப்பு வரைக.
18. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

### பிரிவு - 2

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடையளிக்கவும். [2 × 2 = 4]

19. தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறு குறிப்பு வரைக.
20. உ.வே.சா அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**21.** ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து நீங்கள் அறிவது யாது?

**பிரிவு - 3**

**குறிப்பு : எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். [7 ×2 = 14]

**22.** புணர்ச்சி விதி தருக :
செங்கயல் **(அல்லது)** அணிந்துரை

**23.** சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
தங்கை **(அல்லது)** கால்நடை

**24.** கலைச்சொல்லாக்கம் - பொருள் தருக.

**25.** பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அறிந்து **(அல்லது)** துய்த்தல்

**26.** செய்தார், கண்டான், வென்றாள், பேசினர் - ஆகிய சொற்களில் உள்ள இடைநிலைகள் யாவை? அவை எந்தக் காலத்தைக் குறிப்பிடுகின்றன?

**27.** என்னே ! மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக் கலை (செய்தி தொடராக்குக)

**28.** பாடல் வரிகளில் உள்ள மோனை, இயைபு நயங்களை எடுத்துக் காட்டுக.
வளர்ந்துவளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ? வெண்ணிலாவே!

**29.** காற்புள்ளி, வினாக்குறி அமையுமாறு ஒரு தொடர் எழுதுக.

**30.** சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடராக்குக.
நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை.

**பகுதி - III - பிரிவு - 1**

**குறிப்பு :எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடை தருக. [2 × 4 = 8]

**31.** "சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

**32.** "கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணியது" - யாது?

**33.** சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

**34.** இன்குலாப் 'உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்' எனக் கூறுவதன் நயத்தை விளக்குக.

**பிரிவு - 2**

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடை தருக. [2 × 4 = 8]

**35.** "மலை, மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது" - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்கவும்.

**36.** வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? - நும் கருத்தை எழுதுக.

**37.** ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

**38.** இயற்கையுடன் உரையாடல் ஒன்றைக் கற்பனையாகப் பத்து வரிகளில் எழுதுக.

**பிரிவு - 3**

**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் விடை தருக. [3 × 4 = 12]


**39.** அ) உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

**அல்லது**

ஆ) நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல். - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

**40.** இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்துடன் மூன்று நயங்களைச் சுட்டுக.
"தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க,
தெண் திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ."
**– கம்பர்**

**41.** பகுதி, விகுதி, இடைநிலை ஆகியவற்றைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.




**42.** மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
அவசரக் குடுக்கை
முதலைக்கண்ணீர்
கைதூக்கிவிடுதல்
கானல்நீர்

**43.** தமிழாக்கம் தருக.
1. Work while you work and play while you play.
2. The Pen is mightier than the Sword.
3. An eye for an eye only ends up making the whole world blind.
4. Nobody can hurt me without my permission.

**பகுதி - IV**

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. [3 × 6 = 18]

**44.** அ) காவடிச் சிந்து ஒரு வழிநடைப் பாடல் - இக்கூற்றை அண்ணாமலையாரின் பாடல்வழி மதிப்பீடு செய்க.

**அல்லது**

ஆ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.

**45.** அ) பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்கவும்.

**அல்லது**

ஆ) ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு வாயிலாக நீவிர் அறிந்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**46.** அ) சிந்தனைப் பட்டிமன்றத்தின் நிகழ்வுகளைச் சுவை குன்றாமல் தொகுத்து எழுதுக.

**அல்லது**

ஆ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com
www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**பகுதி - V**

**குறிப்பு : அடிபிறழாமல்** எழுதுக. [4 + 2 = 6]

47. அ) "ஆக்கியோன்..." எனத் தொடங்கும் நன்னூல் - பாயிரம்.

ஆ) 'செயல்' - என முடியும் குறள்

## விடைகள்

**பகுதி - I**

1. அ) ஆதிநீடல் - காரிருள்
   ஆ) அடி அகரம் ஐ ஆதல் - பைங்கூழ்
   இ) இனமிகல் - பெருங்கொடை
   ஈ) முன் நின்ற மெய் திரிதல் - செங்கதிர்
2. அ) ஊருக்கு உதவுவது
3. ஈ) இரண்டும் சரி
4. ஈ) 45
5. இ) ஆசிரியர்
6. அ) மறதியால் கெட்டவர்களை
7. ஆ) செம்மொழி
8. அ) யானை டாக்டர் - குறும் புதினம்
9. அ) வடிவம்
10. அ) பொருள்களின் துன்பம் அகலும் - பற்றுகள் அகலும்
11. ஈ) பண்புத்தொகை
12. ஈ) மசானபு ஃபுகோகா
13. ஈ) இதழ்
14. மல்லி + இலை - உயிர் + மெய்

**பகுதி - II - பிரிவு - 1**

15. (i) நூலைப்புரிந்து கொள்ளவும், அதன் சிறப்பை உணர்ந்து விருப்பத்துடன் கற்கவும் பாயிரம் உதவுகிறது.
(ii) நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பையும் அந்நூல் வழங்கும் கருத்து வளத்தையும் தொகுத்து நூல் முகப்பில் வைக்கும் முறை பற்றிப் பேசுவது பாயிரமாகும். பாயிரம் பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் என இரு வகைப்படும்.
(iii) ஆயிரம் முகத்தைப் பெற்றது போன்று பல்வேறு துறைச் செய்திகளை விரிவாகக் கூறினாலும் பாயிரம் இல்லையேல் அது சிறந்த நூலாக மதிக்கப்படாது.

16. (i) பெருந்தகையாளனிடம் உள்ள செல்வம் மருந்து.
(ii) மருந்து மரமாக இருப்பவர் பெருந்தகையாளன்.

17. (i) மனோன்மணீயம் தமிழின் முதல் பா வடிவ நாடக நூல். லிட்டன் பிரபு எழுதிய 'இரகசிய வழி' (The Secret Way) என்ற நூலைத் தழுவி 1891இல் பேராசிரியர் சுந்தரனார் இதைத் தமிழில் எழுதியுள்ளார்.
(ii) இஃது எளிய நடையில் ஆசிரியப்பாவால் அமைந்தது. இந்நூல் ஐந்து அங்கங்களையும் இருபது களங்களையும் கொண்டது. நூலின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்துடன் தமிழ்த்தாய் வாழ்த்தும் இடம் பெற்றுள்ளது.
(iii) மனோன்மணீயத்தில் உள்ள கிளைக்கதை 'சிவகாமியின் சரிதம்.' 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய மனோன்மணீயம் மொழிப்பற்றையும் நாட்டுப்பற்றையும் வீர உணர்வையும் ஊட்டுவதாகத் திகழ்கிறது.

18. **மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் :** மேரு மலையினைப் போன்று மதீனா நகரின் மேன் மாடங்கள் உயர்ந்திருந்தன. அங்காடிகள் நிறைந்த தெருக்களில் எழுந்த ஒலி, பெருங்கடலொலி போன்று இருந்தது. மதீனா நகரின் வீதிகள் பிரபஞ்சத்தைப் போன்று பரந்திருந்தன. அந்நகரில் சிறிதும் இடைவெளியின்றி மாளிகைகள் நெருக்கமாக அமைந்திருந்தன.

**பிரிவு - 2**

19. (i) தமிழ்நாட்டின் மாநில மரம் பனைமரம் ஆகும்.
(ii) இது ஏழைகளின் கற்பக விருட்சம் ஆகும்.
(iii) இது ஒரு சிறந்த காற்றுத் தடுப்பான் ஆகும். ஆழத்தில் நீர்மட்டம் குறையாமல் நீரைச் சேமித்து வைக்கும் தன்மையுடையது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறையாது.
(iv) பனை மரத்திலிருந்து நுங்கு, பதநீர் முதலியன கிடைக்கின்றன. அவற்றிலிருந்து கருப்பட்டி, பனங்கற்கண்டு ஆகியவை தயாரிக்கப்படுகின்றன.

20. (i) உ.வே.சா. அவர்கள் தனிநிலையில் புலவர்களிடத்துக் கற்கும் உயர்நிலைக் கல்வி முறையில் கல்வி கற்றார்.
(ii) திருவாவடுதுறை ஆதீன மடத்தின் தலைமைப் புலவராக விளங்கிய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனாரிடம் உ.வே. சாமிநாதர் இம்முறையில்தான் பாடம் பயின்றார்.

21. (i) இராசராசன் காலத்தில் பெண் அதிகாரிகள் அரசுப் பணிகளில் இருந்திருக்கிறார்கள். ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில், 'எருதந் குஞ்சிர மல்லி' என்ற பெண் அதிகாரியைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.
(ii) அதே கோவிலில் முதலாம் இராசாதிராசன் காலத்திலும் ஓர் அதிகாரிச்சி பற்றிய குறிப்பு இருக்கிறது. அவர் பெயர் சோமயன் அமிர்தவல்லி.
(iii) இவற்றின் மூலம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெண்கள் அதிகாரிகளாகப் பணிபுரிந்திருக்கின்றனர் என்பது அறியப்படுகிறது.

**பிரிவு - 3**

22. **செங்கயல் = செம்மை + கயல்**

**விதி 1 :** "ஈறுபோதல்' எனும் விதிப்படி 'மை' விகுதி கெட்டு. செம்மை கயல் = செம் + கயல் என்றானது.

**விதி 2 :** 'முன்னின்ற மெய்திரிதல்' எனும் விதிப்படி செம் + கயல் = 'செங்கயல்' என்றானது.

**அல்லது**

**அணிந்துரை = அணிந்து + உரை**

**விதி 1:** 'உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்' - அணிந்த் உரை

**விதி 2 :** ' உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' அணிந்(த் + உ) ரை = அணிந்துரை எனப் புணர்ந்தது.

23. **தங்கை – தம் கை**
(i) அக்காளும் **தங்கை**யும் எப்போதும் ஒற்றுமையாக இருப்பர்.
(ii) **தம் கை**யால் பிறருக்கு உதவி மட்டுமே செய்ய வேண்டும் என்று எண்ணுபவர் என் அப்பா.

**அல்லது**

**கால்நடை – கால் நடை**
(i) **கால்நடை**களை மேய்ச்சல் நிலத்திற்கு ஓட்டிக் கொண்டு போனார்கள்.
(ii) சிறிய தொலைவைக் கடக்கக் **கால் நடை**யாகச் செல்வது உடலுக்கு நலம் பயக்கும்.

24. (i) கலைச் சொல்லாக்கம் என்பது பொருள் தெரிந்த பிறமொழிச் சொற்களுக்குத் தாய்மொழியில் சொற்களை உருவாக்கிக் கொள்ளும் முறைக்குக் கலைச்சொல்லாக்கம் என்று பெயர்.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



(ii) புதிய புதிய சொற்களை உருவாக்குதலே கலைச்சொல்லாக்கம் ஆகும்.

25. **அறிந்து – அறி + த் (ந்) + த் + உ**
அறி - பகுதி
த் - சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**அல்லது**

**துய்த்தல் – துய் + த்+ தல்**
துய் - பகுதி
த் - இறந்தகால இடைநிலை
தல் - தொழிற்பெயர் விகுதி

26. செய்தார் - செய் + த் + ஆர்
**செய்தார் – செய் + த் + ஆர்**
த் - இறந்தகால இடைநிலை

**கண்டான் – காண் + ட் + ஆன்**
ட் - இறந்தகால இடைநிலை

**வென்றாள் – வெல் + ற் + ஆள்**
ற் - இறந்தகால இடைநிலை

**பேசினர் – பேசு + இன் + அர்**
இன் - இறந்தகால இடைநிலை

27. மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக் கலை மிகவும் அழகு வாய்ந்தது.

28. மோனை - **வ**ளர்ந்து - **வா**டி
இயைபு - வெண்ணிலாவே

29. பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?

30. (i) தெற்கிலிருந்து வீசுவதால் தென்றல் எனப்படுகிறது.
(ii) மாலை நிலவு மனதை மகிழ்விக்கும்.

**பகுதி - III - பிரிவு - 1**

31. (i) **இடம்** : "சலச வாவியில் செங்கயல் பாயும்" என்ற தொடர் திருமலை முருகன் பள்ளுவில் வடகரை நாட்டின் வளத்தைப் பற்றிப் பள்ளு கூறுவதாக அமைந்த தொடர் ஆகும்.
(ii) **பொருள்** : தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும்.
(iii) **விளக்கம்** : வடகரை நாடு நீர் வளம் மிக்கது. அங்குள்ள நீர் நிறைந்த தாமரைத் தடாகத்தில் செந்நிறமான கயல் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடுகின்றன என்று கவிஞன் வடகரை நாட்டின் நீர் வளத்தைப் பாடுகிறான்.

32. **மதீனா நகரம் ஒரு கொடை நகரம் :**
(i) பழைமையான மதீனா நகரம் கலைஞர்களும் மறையவர்களும் நினைக்கின்ற பொருள் வளத்தைக் கொண்டது. அங்கு எந்தப் பொருளும் இல்லையென்று சொல்வதற்கு இல்லை.
(ii) அப்படிக் கேட்போர்க்கும் அப்பொருளை எல்லாம் வாரி வழங்கும் வள்ளன்மை கொண்டவர்கள் உண்டு.
(iii) அவ்வள்ளல்களை விடக் குறையாத பெரும் புகழைப் பெற்றது மதீனா நகரம். இவையே கலைஞர்களும் மறையவர்களும் கருத்தில் எண்ணியதாகும்.

33. என் அன்னையே! தலை ஒற்றியெடுத்தபோது நெற்றியில் படிந்த மண்ணின் அழகே! வழிவழியாக உன் திருவடிகளைத் தொழுதவர், உழுதவர், விதைத்தவர், வியர்வை சிந்தியவர்க்கெல்லாம் நிறைமணி தந்தவளே! உனக்குப் பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு பாடத்தான் வேண்டும்.

தொன்மையான கபாடபுரம் போன்ற நிலப்பரப்புகளைப் பலி கொண்ட பிறகும் ஒலிக்கின்ற கடலையும், நெருப்பாற்றையும், மலை உச்சிகளையும் காற்றிலே ஏறிக் கடந்து தமிழைச் செல்லுமாறு கட்டளை இடுகின்ற பாடலைப் பாடத்தான் வேண்டும். மேலும் காலத்தால் அழிவில்லாத தொன்மையான செல்வங்களின் வலிமை சேருமாறு பாடத்தான் வேண்டும் என்று கவிஞர் சு. வில்வரத்தினம் தமிழ்த்தாயை வாழ்த்திப் பாடுகிறார்.

34. (i) கடல் ஓய்வில்லாமல் ஒலித்துக் கொண்டிருக்கும் இயல்புடையது.
(ii) அது எண்ணற்ற உயிரினங்களை வாழ வைக்கிறது.
(iii) தன்னிடம் வரும் நன்மையோ, தீமையோ எதுவாயினும் தன்னுள் அடக்கி வைக்கும் வலிமை கொண்டது.
(iv) அதனால், இந்த உலகமே எனக்குக் கடலாக மாறவேண்டும்.
(v) உலகுக்கு நன்மை தரும் செயல்களைச் செய்து அந்தக் கடலில் நானும் ஒரு துளியாக இணைய வேண்டும் என்று நயம்படக் கூறுகிறார்.

**பிரிவு - 2**

35. (i) 'சேயோன் மேய மைவரை உலகம்' என்று தொல்காப்பியமும். "விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ' என்று திருமுருகாற்றுப்படையும் தமிழரின் கடவுளையும் மலையையும் தொடர்புபடுத்தும் பண்டைய பதிவுகளாக விளங்குகின்றன.
(ii) பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் கடையேழு வள்ளல்களும் மலைப் பகுதியின் தலைவர்களாகவே விளங்கியுள்ளனர்.
(iii) தமிழர்கள் தம் வாழ்வில் 'நுனி முதல் அடி வரை'. 'அடி முதல் நுனி வரை' என்னும் தொடர்களில் 'வரை' என்ற சொல் விளிம்பு என்னும் பொருளில் வருகிறது. 'வரை' என்றால் மலை என்ற பொருளும் தருகிறது.
(iv) பாண்டிய மன்னன் ஒருவன் 'மலயத்துவஜ' என அழைக்கப்பட்டான் என்பதும் 'மலய' என்ற சொல்லின் திராவிடத் தொடர்புக்கு அரண் சேர்க்கிறது.

36. **வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி சாத்தியமே:**
(i) வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை ஆகிய அனைத்தையும் நன்றாக இடித்து கோமியத்தில் ஊற வைத்துப் பயிர்களில் தெளித்தால் தாவரத்திலுள்ள பூச்சிகள் வெளியேறும். இதனை 'இயற்கைப் பூச்சிக்கொல்லி' என்கிறோம்.
(ii) செயற்கைப் பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்துவதால் அது பூச்சியை மட்டும் கொல்லாமல் விளைகின்ற பயிர்க்குள்ளேயும் ஊடுருவுகிறது. அதனை உட்கொள்ளும் மக்களுக்குப் புற்றுநோய், வயிற்றுப்புண் என இன்னும் பல நோய்கள் வருகின்றன.
(iii) வேதிக்கலப்பில்லாத இயற்கை உர பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்தினால் நுண்ணுயிர்ப் பெருக்கம் குறையாமல், மண் சத்து வீணாகாமல் மண்வளமும் அதிகமாகும்.
(iv) இதனால் வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமாகும் என்பதில் ஐயமில்லை.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com


37. (i) ஜீவா பெற்ற வரம் பேச்சுக்கலை.
(ii) அவர் பேசுகையில் வெளிப்படும் உத்திகளும், பேச்சை அமைக்கும் அழகும் வெகு நூதனமாகவும் நளினமாகவும் இருக்கும்.
(iii) பேச்சுக்கலையை விளக்கும் பாடப்புத்தகங்களைக் காலடியில் போட்டு மிதித்தவர். அவருடைய பாணி இரவல் பாணி அல்ல, கற்று அறிந்ததும் அல்ல.
(iv) நாட்டுமக்களின் தரம், அனுபவம், பழக்கம், நம்பிக்கை போன்றவற்றை நன்றாகத் தெரிந்து கொண்ட ஒரு மனிதர் ஜீவா. செய்தியைக் கலை நோக்கோடு அணுகிக் கற்பனை கலந்து பேசும் பேச்சுப்பாணி.

38. **மனிதன்:** கற்பிற்கு நீ கூறும் இலக்கணம்?
**இயற்கை:** எந்தப் பறவையும் தன் இணையின்றி மற்றவற்றோடு இணைவதில்லை. கதிரவன் நேரம் கடந்து உதிப்பதில்லை. பூமி சுழற்சி குறைவதும் இல்லை.
**மனிதன்:** உழைப்பு பற்றி நீ சொல்ல விரும்புவது?
**இயற்கை:** பூவிலிருந்து பூமி வரை எல்லாம் உழைத்துக் கொண்டுதான் இருக்கிறது. தனக்கு மட்டும் உழைப்பது அல்லாமல் பிறருக்காக நாங்கள் உழைத்துக் கொண்டிருக்கிறோம்.
**மனிதன்:** உன்னிடம் பெருமைக்குரிய செயல் எது?
**இயற்கை:** மனிதர்களைப் போன்று எங்களுள் ஜாதி, இனம், மொழி, மதம், நிறம், பொருளாதாரம் வேறுபாடுகள் இல்லை. எங்களின் ஒற்றுமையால்தான் கோடானுகோடி உயிர்கள் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றது. எங்களிடம் காமம், கோபம், வஞ்சனை, வக்கிரம், பொறாமை, துரோகம், ஆணவம், பேராசை, இவைகளுக்குப் பொருள் இல்லை.

## பிரிவு - 3

39.
அ) **அணி விளக்கம் :** உவமையாக உள்ள பொருளுக்கும் உவமிக்கப்படும் பொருளுக்கும் வேறுபாடு தோன்றாமல் இரண்டும் ஒன்று என்ற உணர்வு தோன்ற இரண்டையும் ஒற்றுமைப்படுத்த உருவக அணியாகும்.
**சான்று :** இரவென்னும் ஏமாப்பில் தோனி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்
**சான்று விளக்கம் :** பிறரை எதிர்பார்த்து இரந்து வாழ்தல் என்னும் பாதுகாப்பற்ற படகு, கொடாமை என்னும் பாறை மோதினால் உடைந்துவிடும்.
**அணிப் பொருத்தம் :** இக்குறட்பாவில் இரந்து வாழ்தல் என்னும் பாதுகாப்பற்ற படகு, கொடாமை என்னும் பாறை மோதினால் உடைந்துவிடும் என்ற உவமானத்தையும் உவமேயத்தையும் வேறுபடுத்தாமல் ஒன்றே என்று கூறியிருப்பதால் இது உருவக அணி ஆகும்.
**உவமானம்** : பாதுகாப்பு, கொடாமை
**உவமேயம்** : படகு, பாறை

அல்லது

ஆ) **அணிச்சுட்டல்:** இக்குறட்பாவில் இடம் பெறும் அணி சொற்பொருள் பின்வரு நிலையணி.
**அணி இலக்கணம் :** செய்யுளில் முன்னர் வந்த ஒரு சொல் அதே பொருளில் பின்னரும் பலமுறை வருவது சொற்பொருள் பின்வரு நிலையணி ஆகும்.
**சான்று :** “நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.”
**சான்று விளக்கம் :** நோயையும் அதன் காரணத்தையும் அதை நீக்கும் வழியையும் ஆராய்ந்து மருத்துவர் செயல்பட வேண்டும்.
**அணிப் பொருத்தம் :** இக்குறட்பாவில் நோய் என்னும் சொல் ‘பிணி’ என்னும் பொருளிலும் ‘நாடி’ என்னும் சொல் ஆராய்ந்து என்னும் பொருளிலும், மீண்டும் மீண்டும் வந்துள்ளதால், இது சொற்பொருள் பின்வருநிலையணியாகும்.

40. **மையக்கருத்து :** மருதநிலத்தின் இயற்கை அழகை மிக அழகாக எடுத்தியம்புகிறது இப்பாடல்.
**மோனை :** **த**ண்டலை - **தா**மரை ; **தா**ங்கக் - **கொ**ண்டல்; **கு**வளை - சீர்மோனைகள்
**எதுகை :** த**ண்**டலை - கொ**ண்**டல்கள் ; தெ**ண்**திரை - வ**ண்**டுகள் - அடி எதுகை.
**அணிநயம் :** மாலை நேரக் காட்சிகளை இயற்கையோடு கலந்து உள்ளதை உள்ளபடியே பாடியதால் இயல்பு நவிற்சி அணி பயின்று வந்துள்ளது.
**சுவைநயம் :** மருத நிலத்தின் அழகைப் பாடியுள்ளதால் இப்பாடலில் பெருமிதச் சுவை பயின்று வந்துள்ளது.

41. பாடு + இன் + ஆள் = பாடினாள்
பாடு + கிறு + ஆள் = பாடுகிறாள்
பாடு + வ் + ஆள் = பாடுவாள்
பாடு + (ஆ) ஆள் = பாடாள்

வரை + இன் + ஆள் = வரைந்தாள்
வரை + கிறு + ஆள் = வரைகிறாள்
வரை + வ் + ஆள் = வரைவாள்
வரை + (ஆ) ஆள் = வரையாள்

42. **அவசரக்குடுக்கை** - ஆசிரியர் கேட்கும் கேள்வியைப் புரிந்து கொள்ளாமல் சிலர் **அவசரக்குடுக்கைப்** போல் தவறான பதில் கூறினர்.
**முதலைக்கண்ணீர்** - ஆசிரியரிடம், தவறு செய்த மாணவன், தான் தவறு செய்யவில்லை என **முதலைக்கண்ணீர்** வடித்தான்.
**கைதூக்கிவிடுதல்** - தான் தொடங்கிய தொழிலில் தொய்வு ஏற்பட்ட போது நண்பர்கள் **கைதூக்கி**விட்டனர்.
**கானல்நீர்** - முயற்சி செய்யாதவன் வாழ்க்கையில் வெற்றி என்பது **கானல்நீர்** போலத்தான்.

43. **தமிழாக்கம் :**
1) வேலை செய்யும்போது வேலையில் கவனம் வை! விளையாடும்போது விளையாட்டில் கவனம் வை!
2) கத்தி முனையைவிட பேனாமுனை கூர்மையானது.
3) கண்ணுக்குக் கண் என செயல்பட்டால் அது இந்த உலகம் முழுவதையும் குருடாக்கிவிடும்.
4) என் அனுமதியில்லாமல் என்னை யாரும் புண்படுத்த முடியாது.

## பகுதி - IV

44.
அ) **முன்னுரை:** காவடி தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்று. உலகெங்கும் வாழும் தமிழர்கள் குன்றுதோறும் வீற்றிருக்கும் முருகன் கோவில்களில் காவடி எடுத்து ஆடுவது வழக்கமாக உள்ளது. காவடி எடுத்துச் செல்வோர், அதைச் சுமையாக எண்ணாமல் பாடியவாறே செல்வதற்கு வழிநடைப் பாடல்களை இயற்றியுள்ளனர்.
**காவடிச் சிந்து விளக்கம்:**
(i) தமிழ்நாட்டில் பண்டைக்காலம் முதல் நாட்டார் வழக்கில் உள்ள இசை மரபே காவடிச்சிந்து எனலாம். முருகப் பெருமானின் வழிபாட்டிற்காகப் பால் முதலான வழிபாட்டுப் பொருட்களைக் கொண்டு செல்வோர், ஆடல் பாடல்களுடன் ஆலயங்களை நோக்கிச் செல்வர்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



(ii) அவர்களின் வழி நடைப்பாடல் வகைகளிலிருந்து **காவடிச் சிந்து** என்ற பா வடிவம் தோன்றியது.

**அடியார்கள் :**

(i) சென்னிகுளம் என்னும் நகரில் வாழ்கின்ற அண்ணாமலைதாசன் பாடிய உலகம் போற்றும் காவடிச்சிந்து என்னும் மதுரமான கவிமாலையைத் தன் மலை போன்ற அகன்ற தோளில் சார்த்திக் கொள்கிறான் முருகன்.

(ii) "அந்தக் கழுகுமலைத் தலைவன் முருகனின் கோவில் வளத்தை நான் சொல்கிறேன். பெண்ணே! கடலில் வாழும் மீன், மகரம் போன்ற உருவ அமைப்புகள் கொண்ட கொடிகள் எல்லாம் சிறக்க, முருகன் கோவில் திகழ்கிறது.

(iiii) காவடி எடுக்கும் அடியார்கள் பாடும் திருப்புகழ் முழக்கமானது, அமராவதிப் பட்டினத்தில் உள்ள தேவர்களின் செவியைச் சென்று அடைகிறது. நெஞ்சம் நெகிழ்ந்துருக, தங்கத்திலும் மேலான காவடியைத் தோளில் தூக்கிக் கனலில் உருகிய மெழுகென முருகனை நோக்கி வரும் பக்தர்கள் அருளைப் பெறுவார்; இன்பம் அடைவார்.

**முழக்கம்:** இது கூட்டமாகக் கூடிக் காவடி எடுத்துக்கொண்டு போகும்போது பாடிக்கொண்டு போவது, ஒருவர் பாட்டைப்பாடி முடிக்க, கூட்டத்தினர், 'அரோகரா' என்று முழங்குவர்.

**முடிவுரை:** பக்தர்கள் நேர்த்திக் கடனைச் செலுத்த காவடி தூக்குவர். பக்திப் பரவசத்தால் ஆடல் பாடல்களில் தம் சிந்தையைச் செலுத்தி அக மகிழ்வர். அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து - இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு இசையில் பாடி பக்தர்களின் செவிகளுக்கு விருந்தாக அமைவது நாம் பெற்ற பெரும்பாக்கியமாகும்.

**அல்லது**

**ஆ) முன்னுரை:**

**வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து**
**வான்புகழ் கொண்ட தமிழ்நாடு**

உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் திருக்குறள், மனிதனின் மேம்பட்ட வாழ்வுக்குத் தேவையான கருத்துகளைத் தன்னிடம் கொண்டுள்ளது. இந்தக் கருத்துகள் மக்களால் பின்பற்றப்படுமானால் இந்த மனித சமூகம் உயர்வான நிலையை அடையும் என்பது உண்மை. இங்கு வாழ்வின் உயர்வுக்கு வள்ளுவர் கூறும் சில குறட்பாக்களைக் காண்போம்.

**வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக இருப்பது திருக்குறளே:**

**கடமை மறவாதிருத்தல்:**

**இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தாம்தம்**
**மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.**

மகிழ்ச்சியில் கடமையை மறக்கும்போது, அவ்வாறு மகிழ்ச்சி ஏற்பட்டபோது கடமையை மறந்து கெட்டழிந்தவர்களை நினைத்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆகவே கடமையை மறத்தல் கூடாது. அதுவே வாழ்வை உயர்த்தும் என்கிறார்.

**உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்**
**உள்ளியது உள்ளப் பெறின்**

நாம் செய்து முடிக்க வேண்டிய செயலை மனதில் மறவாமல் நினைத்துக் கொண்டிருந்தால் அதை அடைவது எளிது. ஆகவே குறிக்கோளை மனதில் நிறுத்த வேண்டும் என்கிறார்.

**குறிப்பறிதல் :**

**குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்**
**யாது கொடுத்தும் கொளல்**

முகக்குறிப்பை வைத்துக் கொண்டு மனதில் என்ன நினைக்கிறார் என்பதை அறிந்து கொள்ளும் திறன் படைத்தவரை எதைக் கொடுத்தாவது நம்முடன் வைத்துக் கொள்ள வேண்டும்.

**பாதுகாப்பு :**

**மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்**
**எனநான்கே ஏமம் படைக்கு**

வீரம், தன்மானம், முன்னோர் வழி, நம்பிக்கைக்கு உரியவர் ஆகியவற்றைக் கொண்டிருந்தால் படைக்கு மட்டுமல்ல வாழ்க்கைக்கும் பாதுகாப்பாகும். மேலும் பகை என்னும் பண்பில்லாத ஒன்றை, ஒருவன் விளையாட்டுக்குக் கூட விரும்பக் கூடாது.

**மருந்து :**

**மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்**

வாழ்வின் உயர்வுக்கு அடிப்படையாக விளங்குவது உடல்நலம். இக்குறள்படி உடலுக்கு மருந்து எப்போதும் தேவையில்லை. ஒருவர் முன்பு உண்ட உணவு செரித்துவிட்டதா என அறிந்து கொண்டு உணவு உண்டால் மருந்து தேவையில்லை. ஆகவே வாழ்வின் உயர்வுக்கு அடிப்படையாக விளங்குவது உடல்நலமேயாகும்.

**முடிவுரை:**

வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக இருப்பது திருக்குறளே! என்பதை சில குறட்பாக்கள் வழி அறிந்துணர்ந்தோம். இவற்றை அறிந்து கொண்டதோடு மட்டும் நின்றுவிடாமல் வாழ்வில் பின்பற்றி மகிழ்ச்சியாகவும், குற்றம் நீங்கியும் உயர்வான நிலையை அடைந்தும் வாழவேண்டும் என்பதே இக்குறட்பாக்களின் நோக்கமாகும்.

45.

அ) **முன்னுரை :** கல்வியின் நோக்கம் நாகரிகத்தையும், பண்பாட்டையும் வளர்ப்பதாகும். பன்னெடுங்காலமாக முன்னோர்களால் வளப்படுத்தப்பட்ட அறிவாற்றலையும் அனுபவத்தையும் ஒவ்வொருவரும் பெறச் செய்வதே நோக்கமாகும். அந்த வகையில் பௌத்தக் கல்வி, சமணக்கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களைப் பார்ப்போம்.

**சமண, பௌத்தக் கல்வி முறைகள் :** கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம் ஆகிய நான்கு கொடைகளும் சமண சமயத்தின் தலையான அறங்களாகும். திகம்பர துறவிகள் தங்கும் இடங்களிலேயே கல்வியை மாணவர்களுக்கு போதித்தனர். பள்ளி என்ற சொல் சமண பௌத்த சமயங்களின் கொடையாகும். வேடல் என்ற ஊரில் சமணப் பள்ளியில் பெண் சமண ஆசிரியர் 500 மாணவர்களுக்கு கல்வி கற்பித்தார். பெண்களுக்கு தனியாக 'பெண் பள்ளிகள்' உருவாயின. பட்டிமண்டபம் என்ற கலைவடிவம் சமயத் துறையிலிருந்து தோன்றியது.

'ஒட்டிய சமயத்து உறுபொருள்வாதிகள்
பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்'

மணிமேகலையில் சுட்டப்படுகின்றது என்ற செய்தி பௌத்தமும் சமணரும் தமிழகத்தின் கல்வி வரலாற்றுச் செய்த பெரும் பங்கினை விளக்குகிறது. சீனப்பயணி யுவாங்சுவாங் காஞ்சிபுரத்தில் உள்ள பௌத்தப் பல்கலைக்கழகத்தில் உரையாற்றியிருக்கிறார்.

**மரபுவழிக் கல்வி முறைகள் : குருகுலக்கல்வி முறை:** மாணவர்கள் ஆசிரியர்களை அணுகி அவருடன் தங்கி, கல்வி கற்றனர். செய்து கற்றல், வாழ்ந்து கற்றல், எளிமையாக வாழ்தல் என்ற அடிப்படையில் குருகுலக் கல்வி முறை அமைந்திருந்தது.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**திண்ணைப் பள்ளிக் கல்வி முறை :** அக்காலக் கல்வி முறை திண்ணைப் பள்ளி என்றே தமிழகத்தில் அழைக்கப்பட்டது. 19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கிராமங்கள் தோறும் பெருமளவில் திண்ணைப் பள்ளிகள் இருந்தன. அவைத் 'தெற்றிப் பள்ளிகள்' என்றும் அழைத்தனர். திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் 'கணக்காயர்கள்' என்றே அழைக்கப்பட்டனர்.

**உயர்நிலைக்கல்வி :** தனி நிலையில் புலவர்களிடத்துக் கற்கும் உயர்நிலைக் கல்விமுறை என்ற வகைமைக்குள் இக்கல்விமுறை விளங்கும்.

**தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் :** சமண, பௌத்தக் கல்வி முறைகளில் மாணவர்கள் ஆசிரியர்கள் இருக்கும் இடம் சென்று கல்வி கற்றனர். அதன்பின் குருகுலக் கல்வி முறை தோன்றியது. மரபுவழிக் கல்வி முறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு திண்ணைப்பள்ளியில், பாடசாலைகள், மக்காபுகள், மதரஸாக்கள் என்று நாட்டுக்கல்வி அமைப்புகள் உருவாயின. இப்பள்ளிகளில் பாடத்திட்டம், பள்ளிநேரம், பயிற்றுவிக்கும் முறை ஆகியன ஆசிரியரின் விருப்பப்படியே அமைந்திருந்தன. ஆயினும் பொதுமக்களுடைய கல்வித் தேவையை இப்பள்ளிகள் ஓரளவேனும் பூர்த்தி செய்தன. சென்னை மாகாணத்தில் 12,498 திண்ணைப்பள்ளிகள் இயங்கி வந்தன என்றும் அவற்றின் கல்வித்தரம் பல ஐரோப்பிய நாடுகளின் அப்போதைய கல்வித்தரத்தைக் காட்டிலும் உயர்ந்ததாகவே காணப்பட்டது என்றும் தாமஸ் மன்றோ காலத்தில் நடத்திய ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**முடிவுரை :** குருகுலக் கல்வி, திண்ணைப் பள்ளி, கல்வி நிலையம் என்னும் பல்வேறு வளர்ச்சிகளைக் கண்ட கல்வி அமைப்புமுறை இன்று அறிவியல் தொழில்நுட்பத்தின் உதவியால் வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. சமண, பௌத்தக் கல்வி, மரபுவழிக்கல்வி முறைகளால் தமிழகத்தில் கல்வி முறை முன்னேற்றம் அடைந்துள்ளது.

**அல்லது**

**ஆ)** (i) ஆனந்தரங்கரின் இறுதிகால நாட்குறிப்புகள் ஆங்கிலேயர் புதுச்சேரி மீது நிகழ்த்திய முற்றுகையையும் புதுச்சேரியின் வீழ்ச்சியையும் மிக விரிவாகப் பேசியுள்ளன.

(ii) 1760 பிப்ரவரியில் புதுச்சேரியைத் தாக்க ஆங்கிலேயக் கப்பல்கள் வந்து கொண்டிருந்ததாகவும் செஞ்சியைச் சுற்றியுள்ள பகுதிகளை வென்று, ஆங்கிலத் தளபதி, புதுச்சேரியை நெருங்கிவிட்டதாகவும் தகவல் வந்துள்ளது. ஆங்கிலேயப் படைகள் சாரம்வரை வந்துவிட்டதைப் பொதுமக்கள் வேடிக்கை பார்த்தனர். குண்டு சாலையை ஆங்கிலேயர் பிடித்ததும் புதுச்சேரி நகரில் பீதி நிலவியது.

(iii) தேவனாம்பட்டணத்தில் மேலும் மேலும் துருப்புகளை ஆங்கிலேயக் கப்பல்கள் இறக்கின. புதுச்சேரியைச் சுற்றியுள்ள பகுதிகள் அனைத்தையும் ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர். புதுச்சேரியின் இவ்வாறான சூழ்நிலையில் ஏற்கெனவே நோய்வாய்ப்பட்டு இருந்த ஆனந்தரங்கரின் உடல்நிலை மிகவும் மோசம் அடைந்தது.

(iv) 12-01-1761 திங்கள் கிழமை ஐந்து நாழிகைக்குப் பட்டணத்தின் மீது பீரங்கிக் குண்டுகள் விழுந்து கொண்டிருந்த வேளையில் ஆனந்தரங்கர் மறைந்தார். 1736 ஆம் ஆண்டு செப்டம்பர் 6ஆம் நாள் தொடங்கி ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகாலத் தென்னிந்திய வரலாற்றைப் பதிவு செய்த ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 1761 ஆம் ஆண்டு ஜனவரி 11ஆம் நாளோடு முடிவடைந்துள்ளது.

**சமுதாயச் செய்திகள்**

(i) புதுச்சேரி பட்டணத்து வீதிகள், உப்பங்கழி இடங்களில் காலைக்கடன் கழிப்பவர்களுக்கு ஆறு பணம் தண்டம் (அபராதம்).

(ii) 11.11.1737 அன்று பிரான்சிலிருந்து புறப்பட்ட கப்பல் புதுச்சேரியை அடைந்தது.
புதுச்சேரியில் நாணயம் அச்சிடும் உரிமையை நிஜாமிடமிருந்து பிரெஞ்சு வணிகக் கழகம் பெற்றது. கனகராயர் பல்லக்கில் வைத்துக் கொண்டு வந்தார். 21 பீரங்கிகள் முழங்கின.

(iii) எட்டு மாற்றுக்குக் குறைவான வராக நாணயங்களை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றம் என்று பிரெஞ்சு மன்னர் ஆணை அறிவிக்கப்பட்டது.

(iv) புதுச்சேரி பெருங்காற்றில் பாதித்தது. ஒழுகரையில் கனகராயர் பெருஞ்சோறு அளித்தார்.

(v) இங்கிலாந்திற்கும், பிரான்சுக்கும் போர் மூண்டது. புதுச்சேரிக்குக் கப்பல்களின் வருகை தடைப்பட்டது. லெபூர்தொனேவின் ஒன்பது கப்பல்கள் புதுவைக்கு வந்தன.

46.

**அ) இளைஞர்களின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவுவது 'வீடே'! :**

**முன்னுரை:** பட்டிமன்றம் ஒரு சுவையான விவாதகளம். அது தமிழில் பழங்காலம் தொட்டே அறிமுகமான அறிவார்ந்த பேச்சுக்கலை வடிவம். வாழ்வியல் சிந்தனைகளை மக்கள் முன்பு வலிமையாக வைக்கும் வாதுரை அரங்கமாகும். இங்கு, இளைஞர்களின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவுவது வீடா? நாடா? என்ற தலைப்பில் அமைந்த சிந்தனைப் பட்டிமன்றத்தின் நிகழ்வுகளைக் காண்போம்.

**வீடே :** இளைஞர்களின் முன்னேற்றப் பாதையில் முதல் படிக்கல், அடித்தளம், உரைகல் என விளங்குவது வீடு. குழந்தைகளுக்குத் தாயின் முகம் தான் முதல் பாடப் புத்தகம். கற்றல் என்பதே வீட்டிலிருந்துதான் தொடங்குகிறது. அடித்தளம் வீட்டுச்சூழல், நமது வெற்றி அதன் மீதுதான் கட்டப்படுகிறது. "எத்தனை உயரம் இமயமலை - அதில் இன்னொரு சிகரம் உனது தலை!" என்ற பாடல் வரிகளின் வழியில் இளைஞர்கள் முன்னேற வீடுதான் தாங்குகிறது. வீடு சிறு கூடு அன்று. அது நமது பண்பாட்டையும் மரபையும் காத்து நிற்கும் கருவூலம். அறிவின் நாற்றாங்கால் வீடுதான். பெற்றோர் பாடிய தாலாட்டும் தாத்தா பாட்டி சொன்ன கதைகள் விளக்காய் நின்று ஒளி வீசின. உடன் பிறந்தவர்களால் நேசத்தை உணர்ந்தோம். விளைநிலத்திற்கு அழைத்துச் சென்று உணவு உற்பத்தியாவதைக் காட்டிய பெற்றோர் பேராசிரியர்கள். பனையோலையில் காற்றாடியும் நுங்குக் காய்களில் வண்டி கட்டி விளையாடக் கற்றுக் கொடுத்து இளைஞர்களைப் படைப்பாளியாக்கியது வீடு. குழந்தைப் பருவம் சரியாக அமைந்தால் இளமைப் பருவம் இனிதே வளமடையும். வீடுதான் கலங்கரை விளக்கமாக உள்ளது.

**நாடே:**

வீடு என்னும் சிறிய வட்டத்தைத் தாண்டி நாட்டை நாடிய பின்தான் நல்வாழ்வு துளிர்க்கத் தொடங்கும். பாரதி வீதிக்கு வந்தார் உலகத்தைப் படித்தார். "தமிழா பயப்படாதே. வீதிதோறும் தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்" என்று கட்டளையிட்டார். "தேடு கல்வி இலாததோர்

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



ஊரைத் தீயினுக்கு இரையாக மடுத்தல்' என்று கல்விக் கூடங்களின் இன்றியமையாமையைச் சினத்துடன் எடுத்துக் காட்டினார். அறிவியல் தொழில் நுட்ப யுகம் என்று அறிஞர்கள் சொல்வதை நாடுதான் நமக்கு அறிமுகப்படுத்துகிறது. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு? 'பெண்புத்தி பின்புத்தி' என்றுதான் சொன்னது. ஆனால் வெளியே வந்தால்தான்

**'பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டில்**
**மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே'**

என்பதனை அறிய முடிகின்றது. பெண்கள் விஞ்ஞானிகளாக, கல்வியாளர்களாக, கவிஞர்களாக நடைபோடுவதற்கு நாடே கற்றுக் கொடுத்தது. ஊராட்சி மன்றங்கள், சட்டமன்றங்கள் பெண்களுக்குப் படிப்பிணையாய் உள்ளது.

**நடுவர் தீர்ப்பு:** 'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்' என்றார் பாவேந்தர் பாரதிதாசன். 'வீட்டிற்கோர் புத்தகசாலை வேண்டும்' என்று அறிஞர் அண்ணா கூறினார். எத்தனை பேர் அதைச் செய்தோம்? பிறகெப்படி வீடு பல்கலைக்கழகமாக மாறும்? வீட்டைத் தாண்டி நாட்டுக்குள் வந்தால்தான் சங்ககாலப் புலவர் கணியன் பூங்குன்றனின் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற மேன்மையான பார்வையைப் பெறுகின்றோம். வீடு என்பது நாட்டின் ஓர் அலகு மட்டுமே. நாடு என்பது பன்முக ஆளுமை உடையது. இளைஞர்களின் முழுமையான முன்னேற்றத்திற்குப் பெரிதும் வழிகாட்டுவது நாடே என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

**முடிவுரை:** பண்பட்ட முறையில் கருத்துக்களை முன்வைத்துப் பேசப்படும் பட்டிமன்றத்தில் சிந்தனை ஆற்றல், பேச்சுத்திறன், மொழியாளுமை போன்றவை வளர்த்தெடுக்கப்படுகின்றன. இவ்வாறு சிந்தனைக்கான வெளிப்பாட்டு வடிவங்களில் சிறப்பானதொரு வடிவமாகப் பட்டிமன்றம் விளங்குகிறது.

**அல்லது**

ஆ) **முன்னுரை:** கல்வி என்பது பள்ளி அல்லது கல்லூரியில் மட்டும் பெறப்படுவதன்று. கல்வி கற்பவர் இதழ்களிலும் நடைமுறை அறிவைப் பெறுவதுடன் அதற்கேற்ப வாழவும் முனைகின்றனர். இவ்விதழ்களின் ஆசிரியர்கள் சமூகத்திற்குத் தேவையான பாடங்களை முன் வைக்கின்றனர். சிறந்த பத்திரிகையாளன் 'நல்ல ஆசான்' என்பதில் ஐயமில்லை பாரதியும் இதற்கு விலக்கன்று. செம்மொழியாகத் திகழும் நம் மொழி புதிய நடையும், புதிய உடையும் புதிய பொருளும் கொண்டு எழுச்சியுடன் திகழக் காரணமாக அமைந்த தமிழ்ச்சிற்பி பாரதியின் இதழியல் பணி பற்றி இங்கு ஆய்வோம்.

**உதவி ஆசிரியர் :** எட்டையபுரம் சமஸ்தானத்தின் பணிக்கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறிய பாரதி, மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியராகச் சேர்ந்தார். பின் அங்கிருந்து வெளியேறிய அவர், சுதேசமித்திரன் இதழில் உதவி ஆசிரியராகப் பொறுப்பேற்றார்.

**ஆசிரியர், துணையாசிரியர் :** சுதேசமித்திரன், சக்ரவர்த்தினி, இந்தியா, பாலபாரதி, விஜயா, சூர்யோதயம், கர்மயோகி ஆகியவற்றில் ஆசிரியராகவும் துணையாசிரியராகவும் பணியாற்றினார்.

**படைப்பு வெளியீடு :** சர்வஜன மித்திரன், ஞானபானு, காமன்வீல், கலைமகள், தேசபக்தன், கதாரத்னாகரம் போன்ற இதழ்களிலும் பாரதி தம் படைப்புகளை வெளியிட்டுள்ளார்.

**புனைப்பெயர்கள் :** 'தான்' என்ற ஒன்றை ஒழித்தவர் பாரதி. ஆங்கிலேயர்களின் கெடுபிடிகளால், விடுதலை வேட்கையூட்டும் கருத்துகள் மக்களைச் சென்றடைந்தால் போதும் என்று எண்ணி இளசை சுப்ரமணியம், சாவித்திரி, சி. சு. பாரதி, வேதாந்தி, நித்திய தீரர், உத்தமத் தேசாபிமானி, ஷெல்லிதாசன் போன்ற பல புனைபெயர்களில் எழுதியுள்ளார்.

**கருத்துப்பட இதழ் :** தமிழ் இதழியல் துறையில் முதன் முதலாகக் கருத்துப் படங்களை அறிமுகப்படுத்தியவர். தமிழில் 'சித்திராவளி' என்ற பெயரில் கருத்துப்படங்களை மட்டுமே கொண்ட இதழ் ஒன்றை நடத்த விரும்பினார். பெண் விடுதலைக்குப் பாடுபட்ட பாரதி பெண்களுக்காகத் தமது 'சக்ரவர்த்தினி' இதழில் குறள் வெண்பா எழுதியுள்ளார்.

**இந்தியா இதழ் :** 'இந்தியா' இதழைச் சிவப்பு வண்ணத்தாளில் வெளியிட்டார். சிவப்பு வண்ணம் புரட்சியையும் விடுதலையையும் குறிப்பது என்பதால் அடிமைத் தளையில் இருந்து இந்தியாவை விடுவிக்க வேண்டும் என்ற எண்ணம் பாரதியின் இந்தியா இதழின் வண்ணத்திலும் வெளிப்பட்டது.

**மகுடமிடல் :** தமிழ் இதழ்களில், தமிழ் மாதம் மற்றும் ஆண்டைக் குறிப்பிடும் முறையைக் கையாண்டவர். தமிழில் தலைப்பிடுவதற்கும் பாரதியே முன்னோடி. தலைப்பிடலை 'மகுடமிடல்' என்றே பாரதி கூறுகின்றார்.

**முடிவுரை :** எந்த நெருக்கடியான காலக் கட்டத்திலும் பாரதி தம் இதழியல் பணியைக் கைவிடவில்லை. இவருடைய இதழ்கள் எல்லாம் சிறப்பாகத் தொகுக்கப்பட்டு இன்றைக்கு நூலாக்கம் பெற்றுள்ளன. இவையெல்லாம் தமிழினத்தின் பேறு.

**பகுதி - V**

47.

அ) ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோடு ஆய்எண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே.
காலம் களனே காரணம் என்றுஇம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே.

ஆ) வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

☆ ☆ ☆

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com